International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# பேரா. இரா. சாரங்கபாணியார் திருக்குறள் உரைவேற்றுமையில் பாட வேறுபாடுகள்

**தி. வனரோஜா**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் த. சசிகலா**
உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அரசு கலைக் கல்லூரி – முட்லூர், சிதம்பரம்

**ஆய்வு சுருக்கம்**

திருக்குறள் உலகம் போற்றும் ஒப்பற்றநூல். எக்காலத்திற்கும், எந்நாட்டவர்க்கும், எச்சமயத்தினர்க்கும், எம்மொழியினர்க்கும், ஏற்புடையதாய்த் திகழும் அறிவுக் கருவூலம். இவ்விருபதாம் நூற்றாண்டில் தெளிவுரை, விளக்க உரை. சுருக்க உரை என்னும் வகையில் அறிஞர் முப்பதிற்கும் மேற்பட்டோர் உரை எழுதியுள்ளனர். தம் உரைநடை நூல்கள் வாயிலாகவும் கட்டுரைகளின் வாயிலாகவும் பெருமக்கள் குறளுக்குப் புத்துரை கூறியுள்ளனர். சில மொழி பெயர்ப்பு நூல்களிலும் நாளிதழ் திங்களிதழ்களிலும் திருக்குறள் பற்றிய புதிய செய்திகள் உள்ளன. இவ்வாறு காணப்படும் உரைகளை அப்படியே தொகுத்துத் தராமல் வேறுபட்ட உரைகளை மட்டும் தேர்ந்தெடுத்துப் பேராசிரியர் இரா.சாரங்கபாணி இவ்வுரை வேற்றுமை நூலின்கண் தொகுத்துத் தந்துள்ளார். ஒரு குறளுக்குப் பல உரைகள் இப்பொழுது காணப்படினும் வள்ளுவர் ஒருகருத்தைக் கருதித்தான் தம் குறளை இயற்றியிருப்பார். வள்ளுவர் கருத்திற்கும் உரையாசிரியர்களின் கருத்திற்கும் இடையே காணப்படும் வேறுபாட்டினை ஆராய்ந்து முடிநிலை என்னும் பகுதியில் இந்நூலாசிரியர் கூறியுள்ளார் அதனைக் காண்பதே இந்த ஆய்வு ஆகும்.

**முதன்மைச் சொற்கள்**

திருக்குறள் உரைவேறுபடும், உரையாசிரியர்கள், உரையாசிரியர் இயல்பு, சங்க இலக்கிய மேற்கோள்கள்.

**முன்னுரை**

திருவள்ளுவர் ஒரு பொருள்படும்படி தம் குறளை இயற்றினார். எனினும் அவர்தம் நூலுக்கு உரைகள் பல்கி வருகின்றன ஏடெழுதுவோர் பிழையால் நேர்ந்த பாட வேறுபாடுகள் குறளைப் பிரிக்கும் முறை கொண்டு கூட்டு நெறி காலத்தால் சொற்களுக்கு எய்திய பொருள் வேறுபாடு முதலிய காரணங்களால் உரைகள் வேறுபடுகின்றன பரிமேலழகர் கொண்ட மூலத்துக்குப் பிறர் கொண்ட பாடங்கள் மூலங்களில் உரைகள் வேறுபட்டிருக்கும் பொருந்தாதப் பாடங்கள் எடுத்துக்காட்டி மறுக்கப்பட்டுள்ளன. ‘சிலர் உரைகள் நமக்கு கிடைத்துள்ள எவ்வகை குறள் மூலத்துக்கும் பொருத்தமில்லை அதனால் அவ்வுரையை

கொண்டு மூலம் இதுவாகலாம் என உய்த்துணர்ந்து கூறியுள்ளார் இரா.சாரங்கபாணியார் அவர்கள் கூறிய திருக்குறள் உரைவேற்றுமையில் பாட வேறுபாடுகளைக் கட்டுரையில் காண்போம்.

### குறளும் பாட வேறுபாடுகளும்

திருவள்ளுவர் பல்வேறு கருத்துக்கள் தோன்றத் தம் குறளை இயற்றியிருக்க மாட்டார் என்பது உண்மையே யாயினும் ஒரு குறளுக்குப் பதவுரை எழுவானேன் என ஆழ்ந்து நோக்கும் போது பல காரணங்கள் தோன்றுகின்றன. அவற்றுள் முதலாவதாகக் குறளுக்குத் தோன்றிய பாட வேறுபாடுகளை கூறலாம் உரையாசிரியர்கள் கொண்ட பாட வேறுபாடுகளைக் காணும்போது சில பொருத்தமற்றவை என்பதை எளிதில் உணர முடிகிறது.

"50 உரையாசிரியர்களின் உரைகள் அவை வேறுபடும் உரையிடங்களின் எண்ணிக்கை 50 உரைநடை நூல்களில் திருக்குறளுக்குக் கூறப்பட்டுள்ள விளக்கம் அவற்றுள் உரை வேறுபடும் இடங்களின் எண்ணிக்கை தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. உரை வேற்றுமைக் காரணமாக அமைவது பாடவேறுபாடு, சொற்பிரிப்பு, கொண்டு கூட்டு, கால மரபு, இலக்கண வேறுபாடு, தொகைப்பெயர் விளக்கம், ஒரு சொல்லுக்குப் பல பொருள், நயம் கூறல், விளக்கங் கூறல், பிற இலக்கிய செய்திகளைப் புகுத்துதல், கதையைப் பொருத்தல், கொள்கை முனைப்பு என 12 காரணங்களை அடிப்படையாகக் கொண்டு உரைகள் வேறுபடும் இடங்களைச் சுட்டிக் காட்டி அவை வேறுபடுவதற்கான காரணங் களை ஆராய்ந்து குறளுக்கு பொருத்தமான உரையை முடிநிலையாக உரைக்கின்றார்"[1]. மேலும் ஆய்வுக்குரிய நிலையில் இருக்கும் உரைகளையும் சுட்டிச் செல்கின்றார் இரா.சாரங்கபாணியார்.

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**

**நல்லாற்றின் நின்ற துணை.**[2]

என்னும் குறட்பாவில் வரும் இயல்புடைய மூவர் யார் என பல உரையாசிரியர்கள் உரைக்கண்டுள்ளனர். அவற்றைத் தொகுத்து நோக்கிய இரா.சாரங்கபாணியார் இயல்புடைய மூவர் மூவேந்தரா? இளையர், முதியர், பெண்டிரா? அன்றி வேறு மூவரா? என்பது மேலும் ஆய்விற்குரியது என கடந்து செல்கிறார். சில இடங்களில் பரிமேலழகர் உரை குறளுக்குப் பொருந்தி வராமல் இருப்பதனை எடுத்துக்காட்டி பிற உரைகள் அக்குறளுக்கு பொருந்துவதையும் முடிநிலையாக உரைக்கின்றார்.

**அறன்என பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**

**பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.**[3]

இக்குறளின் முடிநிலையில் ஆசிரியர் இக்குறளில் வரும் அஃது என்னும் சுட்டு முன்வந்துள்ள இல்வாழ்க்கையைச் சுட்டுவதே அமைவுடைய தன்றி வருவித்துரைக்கும் துறவறத்தைச் சுட்டுவதாகக் கூறும் பரிமேலழகர் உரை அமைவுடையதாகாது. பிறன் பழிப்பதில்லாயின் நன்று என்பதில் அமைந்த பிறன் என்பது துறவியைச் சுட்டும் தொடர்பின்மையானும் துறவறத்தானைப் பழிக்காமல் என்னும் பொருளுக்குப் பிறர் பழிப்பதில்லாயின் எனப் பாடமிருக்க வேண்டும். அங்ஙனமின்றி பிறன் பழிப்பதில் லாயின் என் இருந்தாலும் இராமலிங்கம் பிள்ளை உரை பொருத்தமில்லை. துறவறத் தாரால் பழிக்கப்படாமை நன்றி என ஒரு சாராரைக் கருதி எழுதும் உரையினும் பொதுநிலையாக எல்லோருக்கும் பொருந்த உரைத்த உரை நன்று. இவ்வகையில் இக்குறளுக்கு மணக்குடவர் உரை தகுவதாகும். பிறன்பழிப்பது என்பதற்கு திரு.வி.க, வை.மு.கோ ஆகியோர் தரும் விளக்கங்கள் உளங்கொள்ள தக்கன. என குறளுக்கு பொருத்தமான உரை இதுவென எடுத்து உரைக்கின்றார். திருக்குறள் உரை வேற்றுமை நூல் முழுவதும் சார்பு தன்மை இல்லாமல் நடுநிலையோடு முடிநிலையில் கூறியுள்ளார் சாரங்கபாணியார்.

### பொருத்தம் கொண்ட பாடம்

சாரங்கபாணியார் குறள்களுக்குக் காணப் படும் வெவ்வேறு பாடங்களுள் எது தக்கது எனக் காரணங்கண்டு உறுதி செய்துள்ளார்.

**தீயவை தீய பயத்தாலால் தீயவை**

**தீயினும் அஞ்சப் படும்.**[4]

இக்குறளுக்குத் 'தீயவே தீய பயத்தலால்' என ஒரு பாடமுண்டு எனக் காட்டுவார். அரஞ்சண்முகனார். நன்மையுந்தீமையுந் தரும் தீயினும் தீமையே தரும் தீயவை அஞ்சப்படும் என்னும் கருத்தழுத்தம் தீயவே தீய பயத்தலால் எனும் பாடத்தாற் பெறப்படுதலின் அதுவே பரிமேலழகர் கொண்ட பாடத்திலும் சிறந்தது என்கின்றார் சரங்கபாணியார்.

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**

**அகநக நட்பது நட்பு.**[5]

என்ற குறளில் 'நட்பதே நட்பு'என்னும் மணக்குடவர் பாடம் கருத்தழுத்தமுடையது. நெஞ்சில் அகம் அஃதாவது உள்நெஞ்சம் எனப் பொருள் கொள்ளல் நன்று என்பார் ஆசிரியர்.

**ஒப்பீட்டு முறை**

ஒப்புமை காணுதல் மனித இயல்பு ஒப்பிலக்கியம் உலகியல் அறிவினை வளர்க்கிறது. உலக இலக்கியத்தை ஓர் இனத்தில் வைக்கிறது பண்பட்ட அறிவினை வளர்கின்றது.

"இலக்கிய ஒப்பாய்வு என்றால் இலக்கியங்களுக்கிடையே நிலவும் ஒப்புமை பண்புகளை மட்டும் இணைத்து நோக்குவது அல்ல. மாறாக பல்வேறு இலக்கியங்களின் இடையில் நிலவும் ஒப்புமைப் பண்பு களுக்குச் சமுதாய அடிப்படையில் விளக்கம் தருவது முரண்படுகின்ற இயல்புகளைச் சிறப்பாக ஆராய்ந்து அத்தகைய முரண்பாடுகளுக்குச் சமுதாய, கலாச்சார, வரலாறு அடிப்படையில் அமைதி காண்பது ஒப்பியல் ஆய்வின் அடிப்படை நோக்கமாக அமைய வேண்டும்."[6] இறைமாட்சி, அரண், படைமாட்சி, படைசெருக்கு ஆகிய அதிகாரங்களில் உள்ள வள்ளுவரின் கருத்துக்கள் இக்காலத்திற்கு அப்படியே பயன்படாது அரசியலில் வேறுபடுவதை சாரங்கபாணியார் காட்டியுள்ளார்.

**முறைசெய்து காப்பாற்றும் மன்னன் மக்கட்கு**

**இறையென்று வைக்கப் படும்.**[7]

மன்னவன் இறைவனுக்கு நிகரானவன் ஆனால் இக்காலக் குடியாட்சி முறையில் இது பொருந்தாது எனக் குறிப்பிட்டு இக்காலத்தில் வாழும் அமைச்சர், ஊர்தலைவர் பல்வேறு நிலையத் தலைவர் ஆகியோரை மன்னன் போன்ற நிலையில் கருதலாம் என்கிறார் சாரங்கபாணியார். அறத்தின் வழியே பெற்ற பொருளே சிறப்புக்குரியது என்பதை,

**அறத்தான் வருவதே இன்பம்மற்று எல்லாம்**

**புறத்த புகழும் இல.**[8]

எனத் திருக்குறளும்

**"சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்**

**அறத்து வழிபடுஉந் தோற்றம் போல".**[9]

என புறநானூறும் சிறப்பிக்கின்றன. மேலும் "அறம் என்பதற்கு இலக்கணம் கூறவந்த பரிமேலழகர் மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் இலக்கிய ஒழிதலுமாம் என்பர்". எனவே தீமைகளை விலக்கி நல்லன செய்தலே அறம் என்பது போதரும்.

**நல்லது செய்தல் ஆற்றீர் ராயினும்**

**அல்லது செய்த ஓம்புமீன் அதுதான்.**[10]

என் புறநானூற்று பாடல் நல்லது செய்யா விடினும் தீயது செய்தலாகாது என்று அறமுரைக்கின்றது"[11]. இங்ஙனம் வெவ்வேறு நூல்களில் ஒப்புமைகளைக் காட்டுகிறார் ஆசிரியர். அறத்தின் வழிபட்ட செல்வத்தை யும் அறத்தையும் திருக்குறள் சிறப்பிப்பது போல புறநானூறு சிறப்பிக்கிறது என இவ்விரு நூல்கள் கூறும் அறத்தை ஒப்புமை காட்டுதல் நோக்கத்தகும்.

**இலக்கிய உத்திகள்**

இலக்கியத்தை ஆராய்வதற்கும் படைப்பதற் கும் பன்னூல்களை நுண்மான் நுழைபுலத்து டன் கற்றுணர்ந்த அறிவும் உலகியல்

அனுபவம் வேண்டும்.சாரங்கபாணியார் திருக்குறள் உரைவேற்றுமையில் பலருடைய உரைக் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுவதோடமையாது அக்கருத்துக்கள் எந்த அளவுக்குப் பொருந்தும் அல்லது பொருந்தாது என்று யாருடைய மனதையும் புண்படுத்தாத வகையில் எழுதியுள்ளார்.

**செவியுணர்விற் கேள்வி யுடையார் அவி யுணவின்**

**ஆன்றாரோ டொப்பர் நிலத்து.**[12]

‘செவியுணவை’ முறையாகப் பெறுபவர்கள் மனிதர்களாக இருந்தாலும் அவர்களின் பெருமையால் தேவர்களுக்கு இணையாக கருதப்படுவார் என்கின்ற வள்ளுவரின் கருத்திற்கு,

**“அவிஉணவினோர் புறங்காப்ப”**[13]

என்னும் புறநானூறு வரிகளும்

**“பூத்த புகையும் அவியும் புலராமை”**[14]

என பரிபாடல் வரிகளும் அவி உணவும் பற்றிக் கூறப்பெறும் சங்க இலக்கிய குறிப்புகளையும் நோக்கின் அவி உணவின் ஆன்றோர் என்பது தேவரையே குறிக்கும் என தோன்றுகின்றது என்று சாரங்கபாணியார் மேற்கோள் காட்டியுள்ளார்.

**முடிவுரை**

பேரா.இரா.சாரங்கபாணியார் இலக்கியத்தில் பன்முகப்புலமையும் நுகர்ச்சியும் பெற்றவர் என்பதை அவர் தம் நூல்களின் மூலமாக அறிய முடிகிறது. விழுமிய சொற்களை கையாள்வதைக் காண முடிகிறது. ஒரே சொல் காலத்திற்கேற்ப பொருள் மாற்றம் பெற்றுள்ளது எனக் குறிப்பதைக் கொண்டு ஆசிரியர் சிறந்த இலக்கிய தேர்ச்சியும் உலகியல் அனுபவமும் பெற்றவர் என்பதை அறியமுடிகிறது. பொருள் வேறுபாடு, திருக்குறள் உரையாசிரியர்களின் உரைகளில் உள்ள வேறுபாடு திருக்குறள், சங்க இலக்கிய நூல்கள் ஒப்பிடும் முறை ஆகியவற்றை இரா.சாரங்கபாணியார் ஆராய்ந்து உணர்ந்த அவர்தம் நூல்களின் மூலம் அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. இரா.சாரங்கபாணியார் திருக்குறள் உரைவேற்றுமை அறத்துப்பால் நூன்முகம்
2. குறள் - 41
3. மேலது - 49
4. மேலது - 202
5. மேலது - 786
6. ஜான்சாமுவேல்.ஜி இலக்கிய ஒப்பாய்வு களங்கள் ப.14
7. குறள் - 388
8. மேலது - 39
9. புறம் - 31
10. மேலது - 195
11. குறள் விருந்து - ப.15
12. 12. குறள் - 413
13. புறம் - 77.5
14. பரிபாடல் - 15.49

**துணைநூற்பட்டியல்**

- இரா.சாரங்கபாணியார் திருக்குறள் உரைவேற்றுமை அறத்துப்பால், அண்ணாமலைப் பல்கலைகழகம் வெளியீடு- 1989, அச்சிட்டோர் - அபர்ணா அச்சகம், 9 அங்காளம்மன் கோவில் தெரு, சிதம்பரம் - 608001.
- இரா.சாரங்கபாணியார் திருக்குறள் இயல்புரை, இராசா அறக்கட்டளை பதிப்பு - 2021.
- இரா.சாரங்கபாணியார் குறள்விருந்து, அந்துவன் பதிப்பகம் -1974 கல்லூரிச் சாலை, செக்காலை, காரைக்குடி -2.